JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of 23.11.2022

**CC.No.95/2014 Name:Sarasal @ Saraswathi W/o.Perumal, D/o. Gurusamy PW1**

<u>மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் அ.சா. 1 அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1)எனக்கு எழுத படிக்க தெரியாது. கையொப்பம் மட்டும் செய்வேன். புகாரில் அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரை போலிசார் எழுதி கொடுத்து அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். என்னுடைய செயின் தங்கமா அல்லது கவரிங்கா என்றால் தங்கம். செயினை நான் எந்த ஊரில் வாங்கினேன் என்றால் பெருந்துறையில் வாங்கினேன். எந்த வருடம் வாங்கினேன் என்றால் சுமார் பத்து வருடம் இருக்கும். எந்த கடையில் வாங்கினேன் என்றால் ஈ.ஆர்.கே. கடையில் வாங்கினேன்.

2)நகை வாங்கிய பில்லை நான் போலிசாரிடமும், நீதிமன்றத்திலும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். செயினுக்கு உண்டான பில்லோ, ரசீதோ என்னிடம் இல்லை என்றால் சரிதான். பெருந்துறை இன்பரா டெக்ஸ் கம்பெனியில் நான் எத்தனை வருடமாக வேலை செய்து வருகிறேன் என்றால் சுமார் நாற்பது வருடம் இருக்கும். இன்பரா டெக்ஸ் கம்பெனியின் ஓனர் கருப்பாக இருப்பாரா அல்லது சிவப்பாக இருப்பாரா என்றால் நல்ல கலராக இருப்பார். ஓனரின் பெயர் என்னவென்றால் சக்திவேல் ஆகும். இன்பரா டெக்ஸ் கம்பெனியின் ஓனரை நான் நேரில் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். என்னுடைய புகாரில் என்ன சங்கதிகள் எழுதப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

3)2011 ம் வருடத்தில் ஒரு பவுன் நகையின் மதிப்பு ரூபாய்

இருபத்தைந்தாயிரம் என்றால் சரியல்ல. ஒரு பவுன் ஏழாயிரத்து ஐந்நூறுக்குதான் நான் வாங்கினேன். புகாரிலும், போலிசார் விசாரணையிலும் செயினின் மதிப்பு ரூபாய் பதினைந்தாயிரம் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் முதன்மை சாட்சியத்தில் ஒரு பவுனின் மதிப்பு இருபதாயிரம் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகாரில் உள்ள சங்கதிகள் என்னவென்று தெரியாத நிலையில்தான் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தெரிந்து தான் கையொப்பம் செய்துள்ளேன்.

4)புகாரில் யார் சொல்லி கையொப்பம் செய்தேன் என்றால் போலிசார் எழுதிய பின்னர் கையொப்பம் செய்யும்படி கேட்டார்கள் அதன்படி கையொப்பம் செய்து கொடுத்தேன். நான் புகார் கொடுக்க வந்தபின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. விசாரித்தார்கள். எப்போது விசாரித்தார்கள் என்றால் 15 ம் தேதி இரவு 7 மணிக்கு என்னுடைய விட்டிற்கு அருகீல் வைத்து விசாரித்தார்கள். என்னுடைய தம்பி சுப்பிரமணியம் வைத்துள்ள பெட்டிகடைக்கு அருகில் நிறைய வீடுகளும், ஒரு ஹாஸ்டலும் உள்ளது என்றால் சரிதான். பெட்டிகடைக்கு அருகில் நிறையபேர் வந்து செல்வார்கள் என்றால் சரிதான்.

5)தற்போது எதிரியாகிய புருசோத்தமன் என்னை தமிழில்தான் குறுக்கு விசாரணை செய்கிறார் என்றால் சரிதான். எதிரி புருசோத்தமன் தற்போது காதில் கடுக்கன் எதுவும் அணியவில்லை என்றும் காது குத்தியதற்கான ஓட்டை இல்லை என்றும் சொன்னால் சாட்சி எதிரியை அருகில் வரவைத்து பார்த்தபின்னிட்டு காதில் காது குத்தியதற்கான ஓட்டை இல்லை எனவும் ஆனால் அது அடைக்கப்பட்டதுபோல் தெரிகிறது எனவும் சாட்சியம் அளிக்கிறார். எதிரி புருசோத்தமனை இந்நீதிமன்றத்தில் தான் முதன்முதலாக பார்க்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதன்மை சாட்சியம் சொன்னபோது நீதிமன்றத்தில் வைத்து பார்த்தேன். அதற்கு முன்பாக சம்பவத்தின்போது பார்த்தேன்.

6)போலிசார் சொல்லிதான் ஆஜர் எதிரியின் பெயர் எனக்கு தெரியும் என்றால் சரிதான். புகாரிலும், போலிசார் விசாரணையிலும் நான் பெட்டிகடையை பார்த்துகொண்டிருந்ததாகவும், அப்போது சிவப்பு கலர் பைக்கில் இரண்டு பேர் வந்ததாகவும், கடை முன்னர் வண்டியை நிறுத்திவிட்டு பின்னால் உட்கார்ந்து வந்தவர் இறங்கி வந்து என்னிடம் பாக்கு கேட்டதாகவும், அந்த இருவரும், மீண்டும் என்னிடம் வந்து பெட்ரோல் இருக்குமா என்று கேட்டதாகவும், பின்னால் உட்கார்ந்து வந்த நபர் சிகரெட் கேட்டதாகவும், நான் சிகரெட் எடுக்க திரும்பிய போது எனது கழுத்தில் போட்டிருந்த இரண்டு பவுன் தங்க சங்கிலியை கையால் பிடித்து அத்துகொண்டு வேகமாக பைக்கில் ஏறி சென்றுவிட்டதாகவும், என்னிடம் தங்க சங்கிலியை அத்து சென்றவர் கருப்பு ஜீன்ஸ் பேண்ட்டையும், வெள்ளை கலர் சட்டையில் கருப்பு புள்ளி போட்ட சட்டையை போட்டிருந்ததகாவும், அவன் வித்தியாசமான தமிழ் மொழியில் பேசியதாகவும், வலது காதில் கடுக்கன் போட்டிருந்ததாகவும், அவன் கருப்பு நிறமாக இருந்ததாகவும் என்று குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

7)மேலும் பைக்கை ஓட்டி வந்தவன் வண்டியில் உட்கார்ந்தபடி பைக்கில் இருந்தான் என்றும் சரியான அடையாளம் தெரியவில்லை என்றும் போலிசார் விசாரணையிலும், புகாரிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் இன்றைக்கு நீதிமன்றத்தில் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட செயினை கொண்டு வந்துள்ளேனா என்றால் கொண்டு வரவில்லை. புகாரிலும், போலிசார் விசாரணையிலும் செயினின் மாடல் பற்றி கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். ஆஜர் எதிரிதான் என்னிடம் நகையை பறித்து சென்றதாக போலிசார் சொல்ல சொல்லிதான் நான் எதிரியை அடையாளம் காட்டினேன் என்றால் சரியல்ல.

8)எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இரண்டு பவுன் நகை எனக்கு கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் என்னுடைய நகை

எனக்கு கிடைக்க வேண்டும் என்று நான் சாட்சியம் அளிக்கிறேன். நான் போலிசார் கேட்டுகொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of 23.11.2022

**CC.No.95/2014 Name:Loganathan S/o.Muthusamy, PW4**

<u>மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் அ.சா. 4 அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1)நான் கட்டிட கூலி வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். போலிசார் எந்த இடத்தில் பார்வை மகசரையும், மாதிரி வரைபடத்தையும் தயார் செய்தார்கள் என்றால் திருட்டு போன இடத்தை பார்வையிட்டு வரைந்தார்கள். அது என்ன இடம் என்றால் பணிக்கம்பாளையத்தில் உள்ள லேடிஸ் ஹாஸ்டல் பக்கத்தில், அரிஜன காலணியில் உள்ள அ.சா.1 சரசாளின் தம்பி பெட்டி கடை முன்பு வைத்து தயார் செய்தார்கள். எத்தனை மணிக்கு பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றால் இரவு 7,8 மணி இருக்கும். நான் எந்த நபருக்காகவும், பயந்து கொண்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான்.

2)பார்வை மகசரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஆனால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. மறந்துவிட்டது. பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தை காவலர்கள் தயார் செய்தாரா அல்லது உதவி ஆய்வாளர் தயார் செய்தாரா என்றால் போலிசார் தயார் செய்தார்கள். அவர்களது பதவி விபரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னிடம் எழுதப்பட்டாத பேப்பரில் கையொப்பம் வாங்கினார்களா என்றால் இல்லை. எழுதிய பேப்பரில்தான் கையொப்பம்

வாங்கினார்கள். நான் இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of 23.11.2022

**CC.No.95/2014 Name:Loganathan (VAO Retd.,) S/o.Angamuthu, PW5**

**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் அ.சா. 5 அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1)என்னுடைய சொந்த ஊர் தாராபுரம். தற்போது நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் பெருந்துறையில் குடியிருந்து வருகிறேன். 18.11.2011 ம் தேதி நானும், எனது உதவி ஆய்வாளரும் பெருந்துறை காவல் ஆய்வாளர் குணசேகரன் அழைத்ததன் பேரில் எல்லைமேடு என்ற பகுதிக்கு சென்றோம் என்றால் சரிதான். எல்லைமேடு பெருந்துறை காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியாகும். பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் குணசேகரன் தான் ஆஜர் எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார் என்றால் சரிதான்.

2)ஆஜர் எதிரி மீது போலிசார் எந்தெந்த காவல் நிலையத்தில் என்னென்ன வழக்குகள் பதிவு செய்துள்ளார் என்பது எனக்கு தெரியாது. எதிரி கொடுத்ததாக கூறப்படும் ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை பக்கங்கள் கொண்டது என்றும் அதில் என்னென்ன எழுதப்பட்டது என்றும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. ஆனால் தற்போது எனக்கு நினைவில்லை. எதிரி கொடுத்ததாக கூறப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் தான் எழுதினார்.

3)இந்த வழக்கில் சொல்லப்படும் வழக்கு சொத்தானது யாரிடமிருந்து என்ன போலிசார் எந்த தேதியில் கைப்பற்றினார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. பெருந்துறை போலிசார் எதிரி புருசோத்தமனிடருந்து கைப்பற்றினார்கள் 18.11.2011 ம் தேதியில்

கைப்பற்றினார்கள். எத்தனை மணிக்கு கைப்பற்றினார்கள் என்றால் மாலை 6 மணிக்கு கைப்பற்றினார்கள். எதிரி மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் ஈரோடு நீதித்துறை நடுவர் எண்.3 மற்றும் ஈரோடு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலும் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

4)ஈரோடு நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்ற வழக்கு எண். சி.சி.எண்.14/2012 வழக்கில் ஆஜர் எதிரிக்கு எதிராக நான் சாட்சியம் அளித்தபோது எல்லைமேடு பகுதியில் என்னுடன் அங்கு எத்தனை பேர் இருந்தார்கள் என்பதும், காவல் ஆய்வாளர் அந்த சமயத்தில் எத்தனை வாகனங்களை தணிக்கை செய்தார் என்ற விபரம் ஞாபகம் இல்லை எனவும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரி என்ன கலர் வண்டியில் வந்தார் என்றால் புளூ கலர் விப்ரோ பைக்கில் வந்தார். என்ன கலர் ஆடை அணிந்திருந்தார் என்றால் அது எனக்கு தற்போது ஞாபகம் இல்லை.

5) எதிரியை எத்தணை மணிக்கு கைது செய்தார் என்றால் மாலை 6.30 மணிக்கு கைது செய்தார்கள். எதிரி எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி வந்தார் என்றால் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்தார். எதிரியை கைது செய்தபின்னர் நான் வீட்டிற்கு சென்றேனா அல்லது காவல் நிலையம் சென்றேனா என்றால் நான் அங்கேயே தான் இருந்து சொத்துக்களை கைப்பற்றும் வரை அங்கு தான் இருந்தேன். சொத்தாக்களை கைப்பற்றிய பின்னிட்டு நான் எங்கு சென்றேன் என்றல் என்னுடைய வீட்டிற்கு சென்றேன்.

6)நான் சொல்வதுபோல் எல்லைமேடு பகுதியில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை என்றும் காவல் நிலையம் வைத்து கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எல்லைமேடு பகுதியில் நான் அரை மணிநேரம் இருந்திருப்பேனா என்றால் முக்கால் மணிநேரம் இருந்திருப்பேன். நான் சொல்வதுபோல் சொன்ன தேதியில் சொன்ன முறறையில் சொன்ன விதத்தில் என் முன்னிலையில் போலிசார் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

7)நான் சொல்வதுபோல் சொன்ன தேதியில் சொன்ன முறையில் சொன்ன விதத்தில் என் முன்னிலையில் போலிசாரிடம் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலத்திலும், கைப்பற்றுதல் மகசரிலும் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு எதிராக நான் வெவ்வேறு நீதிமன்றங்களில் பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.